1972 டிசம்பர் 8]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டெண்டர்கள் கேட்கும்பொழுதே நாமே டெப்ரிசியேட் வேல்யூவை முடிவுசெய்து, அதற்குக் கீழே அதாவது 55 லட்சத்திற்குக் குறைவாக விற்கக் கூடாது என்ற முறையிலே நான் கடைசியாக கேட்டு வந்த டெண்டருக்கு ஒப்புக்கொண்டு விற்று விட்டோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 46 லட்சத்திற்கு ஒரு டெண்டர் வந்தபொழுது சில பேர் அந்த 46 லட்சந்திற்குக் கொடுக்க வேண்டுமென்று சிபாரிச் செய்தார்கள். அவர்கள்தான் ஊழல் பட்டியலைத் தூக்கிக் கொண்டு டெல்லிக்குச் சென்றார்கள். (சிரிப்பு) ஆனால் நாங்கள் கொடுக்கவில்லை.

திரு. ஆர் பொன்னப்ப நாடார் : அது யார் என்று முதலமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏதோ ஜாடை யெல்லாம் புரிந்து கொள்கிற பொன்னப்ப நாடார் அவர்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டாமா ? (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது, தொடர்ந்து நாளைக்கு வைத்துக்கொள்ளலாமா ?

THIRU R. PONNAPPA NADAR : Sir, he may perhaps be allowed to continue tomorrow.

திரு. கே. பி. கோபால் : நாளைக்குத் தொடர்ந்து பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. பி. கோபால் அவர்கள் நாளைக்குத் தொடர்ந்து பேசுவார்கள்.

(2) அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(இ) பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சரவை மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நாளையுடன் முடிவதாக அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானிக்கப்பட்டு இப்பேரவைக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் அதிக உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேச விரும்புவதால் அனைத்துக் கட்சித் தலைவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அவையின் அனுமதியோடு இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்தை 11—12—1972, திங்கள் கிழமை அன்றும் தொடர்ந்து எடுத்துக் கொண்டு அன்று முடித்து விடலாம் என்று கருதுகிறேன். 12—12—1972 முதல் நடைபெற வேண்டிய அலுவல்கள் குறித்து அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்யும்.